# FIRST INFORMATION REPORT

**TAMIL NADU POLICE**

INTEGRATED INVESTIGATION FORM-I

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section ~~154 Cr.P.C.~~) 173 BNSS

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8082886

1. District : மாவட்டம் தூத்துக்குடி | PS: காவல் நிலையம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, தூத்துக்குடி | Year: ஆண்டு **2024** | FIR No. முத.அ. எண் **04/2024** | Date நாள் **17.07.2024**

2. (i) Act சட்டம்: **PC Act, 1988 as Amended in 2018** Sections பிரிவுகள்: **7 and 12**

   (ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : --

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் On 16.07.2024 Before 12.50 hrs

   Date from : நாள் முதல் Date to : நாள் வரை

   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் **17.07.2024** Time : நேரம் **10.30 hrs**

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் **17.07.2024** Time : நேரம் 10.45 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக **Written**

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் **Selection Grade Town Panchayat Office Vilathikulam, about 60 Kms North East**

   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் **Tr.M.Sankara Narayanan**

   (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் **Murugan**

   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : நாட்டினம் **Indian** (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

   (f) Occupation : தொழில் **Special Thasildar (Land Acquisition)** (g) Address : முகவரி **AORF, SIPCOT Unit-2, Thoothukudi.**

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   **(1.) Tr.K.Maheswaran, aged 59/2024, S/o Kamatchi Pillai, Executive Officer, Selection Grade Town Panchayat, Vilathikulam and 3 others.**

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் **இல்லை**

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

----

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு ----

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் ----

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

-- Separate Sheet Enclosed --

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed **J.Anitha**.............. Rank **Inspr of Police**...... to take up the Investigation / Refused Investigation / transferred to PS...................................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ................................ பதவி ........................ நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ................................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

17.7.2024

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

17.7.2024

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
திரு.**S. Peter Paul Durai**

Name: பெயர் :
Rank: பதவி : No. எண் :

Deputy Superintendent of Police
Vigilance And Anti Corruption
Thoothukkudi District
Thoothukkudi

**17.07.2024 at 12.00 hrs**

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

**தூத்துக்குடி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 04/2024, பிரிவு 7 and 12 of PC Act, 1988 as Amended in 2018 – ன் தொடர்ச்சி.**

**பணிந்தனுப்பப்படுகிறது :-**

| | |
|---|---|
| 1. Tr.K.Maheswaran, aged 59/2024,<br>S/o Kamatchi Pillai,<br>Executive Officer,<br>Selection Grade Town Panchayat,<br>Vilathikulam<br><br>**Private Individuals :**<br><br>2. Tr.M.Mariselvam, aged 27/2024,<br>S/o Tr.Mariappan,<br>Driver (through self help group)<br>O/o the Executive Officer,<br>Selection Grade Town Panchayat,<br>Thoothukudi District.<br><br>3. Tr.V.Kanagaraj, aged 32/2024,<br>S/o Tr.Velsamy,<br>No.65A/108, Ambal Nagar,<br>Vilathikulam, Thoothukudi District.<br><br>4. Tr.A.Murugan, aged 50/2024,<br>S/o Tr.Alagu,<br>No.65A, Ambal Nagar,<br>Vilathikulam, Thoothukudi District. | தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் சிறப்பு நிலை பேரூராட்சி அலுவலகத்தில் செயல் அலுவலராக பணிபுரிந்து வரும் திரு.மகேஸ்வரன் மற்றும் அலுவலக பணியாளர்கள் அலுவலகத்திற்கு வரும் பொதுமக்களிடம் தீர்வை ரசீது போட்டுக்கொடுத்தல், பிறப்பு இறப்பு சான்றிதழ்கள் வழங்குதல், சொத்து பெயர்மாற்றம் செய்தல், குடிநீர் இணைப்பு வழங்குதல், மனை பிரிவு அங்கீகாரம் வழங்குதல். குடிநீர் இணைப்பு பெயர் மாற்றம் மற்றும் கட்டிட உரிமம் வழங்குதல் போன்ற பணிகளை செய்வதற்கு லஞ்சமாக |

பணம் பெற்று வருவதாக கிடைத்த ரகசிய தகவலின்பேரில் 16.07.2024 ஆம் தேதி மதியம் 12.15 மணி முதல் மதியம் 12.50 மணி வரை ஆய்வுக் குழு அலுவலர் நிலையில் திரு.M.சங்கரநாராயணன், தனி வட்டாட்சியர் (நில எடுப்பு), அல்லிகுளம் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை உருவாக்கம், சிப்காட் அலகு-2, தூத்துக்குடி மாவட்டம் அவர்களுடன் விளாத்திகுளம் தேர்வு நிலை பேரூராட்சி செயல் அலுவலர் அலுவலகத்தில் நடத்திய திடீர் சோதனையின் அடிப்படையில் ஆய்வுக்குழு அலுவலர் நிலையில் திரு.M.சங்கரநாராயணன் அவர்கள் கொடுத்த புகார் மனுவை 17.07.2024-ம் தேதி நான் தூத்துக்குடி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலக பணியில் இருந்தபோது காலை 10.30 மணிக்கு பெற்று தூத்துக்குடி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 04/2024, பிரிவு 7 and 12 of PC Act 1988 as Amended in 2018–ன் படி மார்ஜினில் கண்ட எதிரிகளின் மீது வழக்கு பதிவு செய்தேன். புகார் மனுவின் விபரம் பின்வருமாறு : அனுப்புநர் : திரு.மு.சங்கரநாராயணன், தனி வட்டாட்சியர் (நில

எடுப்பு) அல்லிகுளம் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை உருவாக்கம், சிப்காட், அலகு-2, தூத்துக்குடி மாவட்டம். பெறுநர் : காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, தூத்துக்குடி பிரிவு. அய்யா, பொருள் : திடீர் தணிக்கை செயல்முறைகள் - மேல் நடவடிக்கை எடுக்கக் கோருவது தொடர்பாக. ****** தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம், சாலையம் தெருவில் மேற்கு பார்த்து அமைந்துள்ள விளாத்திகுளம் தேர்வுநிலை பேரூராட்சி அலுவலகத்தில் செயல் அலுவலராக பணிபுரிந்து வரும் திரு.மகேஸ்வரன் மற்றும் அலுவலக பணியாளர்கள் அலுவலகத்திற்கு வரும் பொதுமக்களிடம் தீர்வை ரசீது போட்டுக்கொடுத்தல், பிறப்பு இறப்பு சான்றிதழ்கள் வழங்குதல், சொத்து பெயர்மாற்றம் செய்தல், குடிநீர் இணைப்பு வழங்குதல், மனை பிரிவு அங்கீகாரம் வழங்குதல். குடிநீர் இணைப்பு பெயர் மாற்றம் மற்றும் கட்டிட உரிமம் வழங்குதல் போன்ற பணிகளை செய்வதற்கு லஞ்சமாக பணம் பெற்றுவருவதாக கிடைத்த ரகசிய தகவலின் பேரில் விளாத்திகுளம் தேர்வுநிலை பேரூராட்சி அலுவலகத்தை எனது தலைமையில் தூத்துக்குடி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை காவல் துணை கண்காணிப்பாளர், காவல் ஆய்வாளர் திருமதி.ஜே.அனிதா மற்றும் போலீஸ் பார்ட்டி உதவியுடன் 16.07.2024-ம் தேதி காலை 12.15 மணி முதல் 12.50 மணி வரை ரகசியமாக கண்காணித்து வந்தோம். அதில் விளாத்திகுளம் தேர்வுநிலை பேரூராட்சி அலுவலகத்தில் செயல் அலுவலர் மற்றும் அலுவலக பணியாளர்கள் விளாத்திகுளம் பேரூராட்சி அலுவலக பகுதிக்கு உட்பட்ட பகுதியில் இருந்து அங்கு வரும் பொதுமக்களிடம் அன்றாட மற்றும் அத்தியாவசிய பணிகளை மேற்கொள்வதற்கு இடைத்தரகர்கள் மூலமாகவும் நேரிடையாகவும் லஞ்சம் பெற்று வருவதற்கான முகாந்திரம் தெரிய வந்ததால் 16.07.2024-ம் தேதி காலை 12.50 மணி முதல் இரவு 18.30 மணி வரை மேற்படி அலுவலகத்தை திடீர் தணிக்கை செய்யப்பட்டது. மேற்படி தணிக்கையின் போது விளாத்திகுளம் தேர்வுநிலை பேரூராட்சி அலுவலக செயல் அலுவலர் திரு.K.மகேஸ்வரன் அவர்களின் சட்டை பாக்கெட்டில் 16.07.2024-ம் தேதி திரு.ஹரிஹரசுதன் பெயரில் உள்ள கணக்கு எண்.3339101009767-ல் ரூ.49,900/- விளத்திகுளம் கனரா வங்கியில் இருந்து பணம் செலுத்தியதற்கான ரசீதும், 09.05.2024-ம் தேதி திரு.ஹரிஹரசுதன். பெயரில் உள்ள வங்கி கணக்கு எண்.500101012101225-ல் ரூ.80,000/- விளாத்திகுளம் சிட்டி யூனியன் வங்கியில்

இருந்து செலுத்தியதற்கான ரசீதும் சந்தேகத்திற்கு இடமான வகையில் காணப்பட்டது. எனவே மேற்படி பணம் செலுத்தியதற்கான இரண்டு ரசீதுகளும் வழங்கு விசாரணைக்காக செயல்முறைகள் மூலம் கைப்பற்றப்பட்டது. மேலும் அவருடைய வலது பக்க பேண்ட் பாக்கெட்டில் மடித்தநிலையில் இருந்த வெள்ளை நிற கவருக்குள் 500 ரூபாய் நோட்டுக்களாக மொத்தம் ரூ.9,000/-ம் காணப்பட்டது. அந்த பணம் குறித்து செயல் அலுவலர் திரு. திரு.K.மகேஸ்வரன் அவர்களிடம் விளக்கம் கேட்க அந்த பணம் தனது சொந்த பணம் என்று மட்டும் தெரிவித்தார். ஆனால் அந்த பணம் அவருக்கு எப்படி வந்தது என்பதற்கு தகுந்த விளக்கம் ஏதும் அளிக்க இயலவில்லை. எனவே மேற்படி பணம் **ரூ.9,000/-** உரிய விளகம் ஏதுமின்றி சந்தேகத்திற்கிடமான வகையில் காணப்பட்டதால் வழக்கு விசாரணைக்காக செயல்முறைகள் மூலம் கைப்பற்றப்பட்டது. பின்பு செயல் அலுவலரின் இருக்கைக்கு வலது பக்கம் உள்ள ஸ்டூலின்மேல் இருந்த செயல் அலுவலரின கைப்பையில் இருந்த “பிளான்” என்று தலைப்பிடப்பட்டு 11 நபர்களின் பெயர்கள் எழுதப்பட்டிருந்த துண்டுச்சீட்டும், “M.S. loganathan” என்று ஆரம்பிக்கப்பட்டு தேதி மற்றும் பணம் குறித்த குறிப்புகள் எழுதப்பட்ட துண்டுசீட்டும் சந்தேகத்திற்கு இடமான வகையில் காணப்பட்டதால் வழக்கு விசாரணைக்காக செயல்முறைகள் மூலம் கைப்பற்றப்பட்டது. மேலும் செயல் அலுவலரின் ஓட்டுனர் திரு.மாரிச்செல்வம் என்பவரின் வலது பக்க பேண்ட்பாக்கெட்டில் மடித்தநிலையில் தனியாக காணப்பட்ட ரூ.15,600/-ம், இடது பக்க பேண்ட்பாக்கெட்டில் 18.06.2024 தேதியிட்ட தினமலர் நாளிதழின் 11 மற்றும் 12 ஆம் பக்க பாதி தாளில் சுற்றி இரண்டு 500 ரூபாய் நோட்டுக்களாக வைக்கப்பட்டிருந்த ரூ.1,00,000/- காணப்பட்டது. மேற்படி ரூ.15,600/- குறித்து அவரிடம் விளக்கம் கேட்டபோது அவர் 16.07.2024ம் தேதி காலையில் செயல் அலுவலர் அவர்களின் மகன் திரு.ஹரிஹரசுதன் என்பவரின் வங்கி கணக்கில் காலை சுமார் 10.30 மணியளவில் செலுத்தச்சொல்லி ரூ.65,600/- கொடுத்ததாகவும் வங்கியல் ரூபாய் ஐம்பதாயிரத்திற்கு மேல் செலுத்த PAN கார்டு வேண்டும் என்று கேட்டதால் செயல் அலுவலரிடம் கேட்டுவிட்டு அவர் சொல்லியவாறு ரூ.49,900/-ம் மட்டும் வங்கியில் செலுத்திவிட்டு ரசீது மற்றும் மீத பணம் **ரூ.15,600/-** செயல் அலுவலரிடம் அலுவலகம் திரும்பிவந்து கொடுத்தபோது பணம் செலுத்திய ரசீதை

மட்டும் வாங்கி சட்டைப்பையில் வைத்துக்கொண்டு பணத்தை தன்னிடம் வைத்திருக்குமாறும் பின்பு வாங்கி கொள்வதாக தெரிவித்ததால் பேண்ட் பாக்கெட்டில் தனியாக மடித்து வைத்திருந்ததாகவும் இடது பக்க பேண்ட் பாக்கெட்டில் செய்திதாளில் பொதிந்து வைக்கப்பட்ட பணம் **ரூ.1,00,000/-** அவர் வங்கிக்கு சென்று வந்தபின்பு சுமார் 12.50 மணிக்கு சற்று முன்பு செயல் அலுவலர் வைத்திருக்க சொல்லி கொடுத்தது என்றும் அந்த செய்திதாளில் என்ன இருந்தது என்று அவருக்கு தெரியாது என்றும் தெரிவித்தார். இந்த இரண்டு பணம் குறித்து செயல் அலுவலர் திரு.மகேஸ்வரனிடம் உரிய விளக்கம் கேட்க சரியான முகாந்திரம் தெரிவிக்காததால் அது லஞ்சபணமாக இருக்கும் என்ற சந்தேகத்தின்பேரில் வழக்கு விசாரணைக்காக செயல்முறைகள் மூலம் கைப்பற்றப்பட்டது. மேலும், செயல்அலுவலர் அறைக்கு வெளியே வரிசையாக இருந்த சேரில் அமர்ந்திருந்த திரு.கனகராஜ் என்பவரிடம் ரூ.5,000/- சட்டை பாக்கெட்டில் சந்தேகத்திற்கு இடமான வகையில் உரிய விளக்கமின்றி காணப்பட்டதால் சந்தேகத்தின்பேரில் வழக்கு விசாரணைக்காக அந்த பணம் **ரூ.5,000/-** வழக்கு விசாரணைக்காக செயல்முறைகள் மூலம் கைப்பற்றப்பட்டது. மேலும், பேரூராட்சி அலுவலக ஹாலில் இருந்த சாரதி பில்டர்ஸ் என்ற பெயரில் கட்டுமான பணிகள் செய்துவரும் திரு.முருகன் என்பவரிடம் ரூ.5,000/- பேண்ட் பாக்கெட்டில் சந்தேகத்திற்கு இடமான வகையில் உரிய விளக்கமின்றி காணப்பட்டதால் சந்தேகத்தின்பேரில் அந்தப் பணம் **ரூ.5,000/-** வழக்கு விசாரணைக்காக செயல்முறைகள் மூலம் கைப்பற்றப்பட்டது. மேலும் திடீர் தணிக்கையின் போது மேற்படி கைப்பற்றப்பட்ட பணம் மற்றும் ஆவணங்கள் தவிர்த்து செயல் அலுவலர் மற்றும் பிற அலுவலர்களிடம் காணப்பட்ட பணம் மற்றும் ஆவணங்கள் குறித்து கேட்டபோது உரிய விளக்கம் அளித்ததால் அவை அவர்களிடமே செயல்முறைகள் மூலம் திருப்பி ஒப்படைக்கப்பட்டது. மேலும் இந்த செயல்முறையில் கைப்பற்றப்பட்ட மேற்படி பணம் மற்றும் ஆவணங்கள் தங்களிடம் உரியவர்கள் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொண்டு ஒப்படைக்கிறேன். Sd/- 17.07.2024, திரு.M.சங்கரநாராயணன், தனி வட்டாட்சியர் (நில எடுப்பு), அல்லிகுளம் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை உருவாக்கம், சிப்காட், அலகு-2, தூத்துக்குடி மாவட்டம். Sir, Received the complaint on today (17.07.2024) at 10.45 hrs and registering the complaint as Thoothukudi V&AC

Cr.No.04/2024, U/s 7 and 12 of PC Act, 1988 as Amended in 2018. Sd/- 17.07.2024, S.Peter Paul Durai, Dy. Supdt. of Police, V&AC, Thoothukudi Detachment. இதன் அசல் முதல் தகவல் அறிக்கை, திரு.M.சங்கரநாராயணன் அவர்களின் அசல் புகார் மனு மற்றும் விளாத்திகுளம் தேர்வு நிலை பேரூராட்சி அலுவலகத்தில் வைத்து தயார் செய்த செயல்முறைகள், திரு.மாரிச்செல்வம் என்பவரின் வாக்குமூலம் ஆகியவற்றை இணைத்து மேன்மைமிகு தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிமன்ற நடுவர், தூத்துக்குடி அவர்களுக்கு அனுப்பியும் இதர நகல்களை சம்பந்தப்பட்ட உயரதிகாரிகளுக்கு அனுப்பியும் ஒரு நகலை வழக்கு விசாரணைக்காக திருமதி.J.அனிதா, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, தூத்துக்குடி பிரிவு அவர்களிடம் ஒப்படைக்கிறேன்.

17.7.2024

Deputy Superintendent of Police
Vigilance And Anti Corruption
Thoothukkudi District
Thoothukkudi